# தமிழ்க் கல்விக் கழகம் - யேர்மனி

தமிழாலயங்களின் கல்வி,கலை,விளையாட்டு ஒருங்கிணைப்பு நடுவம்

Tamilische Bildungsvereinigung e.V.

Bildung, Kultur und Sport

Bessemerstrasse 7/c
70435 Stuttgart

Tel: +49 (0)7118709767
Fax: +49(0)7118709769
info@tbvgermany.com
**www.tbvgermany.com**
Steuernummer: 99018/55410

Vereinssitz Stuttgart
Reg: VR 6607
Amtsgericht Stuttgart

Tamilische Bildungsvereinigung e.V. Bessemerstr 7/c 70435 Stuttgart


தமிழாலயங்களின் நிர்வாகி,
ஆசிரியர், பெற்றோர் மற்றும்
மாணவர்களுக்கான அறிவித்தல்

ஸ்ருற்காட் 19.12.2021
சுற்றறிக்கை 11 – 2021
நடுவச் செயலகம்

அன்புடையீர்!

ஆரம்ப காலம் தொடக்கம் இன்றுவரை தொடர்ச்சியாகப் பணியாற்றும் பல முன்னிலைப் பொறுப்புகளை வகிக்கும் பணியாளர்கள், தாம் பெற்ற பட்டறிவையும் பணியின் சுமைகளையும் அடுத்த தலைமுறையினருக்கும் பகிர்ந்துகொள்ளவேண்டியுள்ளது காலத்தின் கட்டாயமாகும். தேசியப் பணியில் இணைந்தோம், செய்தோம், போகின்றோம் என்ற மனநிலையிலிருந்து மாற்றம் அடைந்து, அந்தத் தேசியச் சொத்தைப் பாதுகாக்கும் மனநிலையோடு பகிர்கின்றோம், துணையாக நின்று பாதுகாத்துப் பலம் சேர்ப்போம் என்ற மனநிலைக்கு இன்றைய முன்னணிச் செயற்பாட்டாளர்கள் பொறுப்பேற்றலும் காலத்தின் கட்டாயமாகும்.

எதிர்வரும் 01.01.2022 தொடக்கம் நடைமுறைக்கு வரும் தமிழ்க் கல்விக் கழகத்தின் செம்மைப்படுத்தப்பட்ட நிர்வாகக் கட்டமைப்புகளின் வரைபடத்தை இத்துடன் இணைத்துள்ளோம். அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குகளை அனைவரும் இறுக்கமாகக் கடைப்பிடித்து, உங்களின் தேவைகளுக்கான தொடர்புகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பாக இதுவரை பயன்படுத்தி வந்த info@tbvgermany.com என்ற மின்னஞ்சலின் முக்கியத்துவம் தளர்த்தப்பட்டு, அவை பல்வகையான பிரிவுகளுக்கும் பகிரப்படுகின்றது. அதேபோன்று தொலைபேசித் தொடர்புகளும் பிரிவுகளின் பொறுப்பாளர்களுக்குப் பகிரப்படுகின்றது. எமது இம்மாற்றங்களினால் உங்களின் தேவைகள் மிகவும் துரிதமாகவும் பொறுப்புடனும் நிறைவேற்றப்படும்.

ஒவ்வொரு பிரிவுகளின் துணைப் பொறுப்பாளர்களிடமும் பல சிறப்பான செயற்பாட்டுச் சிந்தனையும் அதன் வடிவங்களும் எம்மால் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. அவற்றை அவர்கள் தமது பொறுப்பாளர்களுடன் இணைந்து, தற்காலத் தொழில்நுட்ப வளர்நிலைக்கு ஏற்றவாறு செயலாற்றுவதற்கு, உங்களின் முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

1. நடுவச் செயலக நிர்வாகத்துக்கும் ஒருங்கிணைப்புக்கும் ஒரு தனித்துவமான பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

2. வழங்கற் பிரிவு தனித்துவமாக உருவாக்கப்பட்டுள்ளது.

3. எமது இணையத்தளம் புத்தம் புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. 15.01.2022 தொடக்கம் அதில் பல்வகையான விடயங்கள் வெளிப்படையாகத் தரவேற்றப்படவுள்ளன.

4. ஆவணப் பிரிவு பல்வகையான புதிய விடயங்களை உள்வாங்கிச் செம்மைப்படுத்தப்படவுள்ளது. அது சார்பாகப் பல ஆவணங்களையும் தகவல்களையும் நீங்கள் அவர்களுக்குத் துரிதமாக வழங்கி ஒத்துழைக்க வேண்டும்.

5. ஒரு சில துணைப் பொறுப்புகள் இன்னும் இடைவெளிகளாக உள்ளன. அவை தேவைக்கேற்றவாறு நிரப்பப்படும்.

அன்புடையீர்!

மூன்றாவது தலைமுறைக் குமுகத்தினருக்குத் தமிழ் பயிற்றும் பணியின் மையம் எதிர்காலத்தில் இளையவர்களின் கைகளில் இருப்பதைத் தூரநோக்குடன் நோக்குவோம். அதற்கான திட்டமிடல்களை உரிய காலத்தில் உருவாக்குவதே ஒரு பண்பட்ட குமுகத்தின் திறனுக்குச் சான்றாகும்.

தற்போது நடைமுறையிலுள்ள பாடநூல்களின் (ஆண்டு 6 – 12 வரை) வரலாற்றுப் பகுதி செம்மைப்படுத்தப்பட்டு, அச்சுப் பதிவு வேலைகள் நடைபெறுகின்றன. குறிப்பிட்டபடி 31.12.2021க்கு முன்னர் அவற்றைத் தமிழாலயங்களுக்கு அனுப்பிவைப்போம்.

நன்றி

லோகன் 19/12/2021

பொறுப்பாளர்
செ. லோகானந்தம் (லோகன்)